# (25 C) நவீன உலக வரலாறு

**(கி.பி. 1500 முதல் 1989 வரை)**

**வினாத்தாள் I**

**பகுதி I**

**கவனிக்குக.**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

---

**பகுதி I**

- **01 - 10** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐவைந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் அடைப்பினுள்ள **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**1.** (1) மிசிசிப்பி (2) கியூபா (3) தேம்ஸ்
(4) நைகர் (5) இரவட் (.......)

**2.** (1) பெற்ராக் (2) மக்கியவல்லி (3) பிரகர்ஸ்
(4) தோமஸ் மூர் (5) இராஸ்மஸ் (.......)

**3.** (1) ஜோன் வைக்ளிப் (2) ஜோன் ஹஸ் (3) மாட்டின் லூதர்
(4) ஜோன் கல்வின் (5) பிரான்சிஸ் சேவியர் (.......)

**4.** (1) பெரஸ்டர் ஜோன் (2) காட்டியர் (3) ஜொலியட்
(4) லா சலே (5) மாக்வெடே (.......)

**5.** (1) உரிமைச் சட்டம்
(2) மனித உரிமை தொடர்பான பிரகடனம்
(3) மனித உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனம்
(4) அபார்தீட்
(5) சிவில் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனம் (.......)

**6.** (1) வெனிசுவெல (2) ஆர்ஜன்டீனா (3) கொலம்பியா
(4) பேரு (5) நைஜீரியா (.......)

**7.** (1) வூட்ரோ வில்சன் (2) லொயிட் ஜோர்ஜ் (3) பிராங்லின் ரூஸ்வெல்ட்
(4) ஜோன் கெனடி (5) ஜிம்மி காட்டர் (.......)

**8.** (1) ஜவஹர்லால் நேரு (2) லால் பகதூர் சாஸ்திரி (3) மகாத்மா காந்தி
(4) இந்திரா காந்தி (5) ரஜீவ் காந்தி (.......)

**9.** (1) உலக சுகாராதார நிறுவனம் (WHO)
(2) வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு (NATO)
(3) வோர்சோ உடன்படிக்கை
(4) தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை அமைப்பு (SEATO)
(5) சென்டோ உடன்படிக்கை அமைப்பு (CENTO) (.......)

**10.** (1) நிகிதா குருஷேவ் (2) அலெக்செய் கொசிஹின் (3) லியோனிட்ஸ் பிரெஷ்னெவ்
(4) லெச் வலேசா (5) மிஹாயல் கொபர்சேவ் (.......)

- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) இந்து மதம் - நேபாளம்
(2) பௌத்த மதம் - தாய்லாந்து
(3) இஸ்லாம் மதம் - ஈரான்
(4) யூத மதம் - லெபனன்
(5) கத்தோலிக்க மதம் - பிலிப்பின் தீவு (.......)

**12.** (1) நூற்றாண்டுப் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில்
(2) ஏழாண்டுப் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில்
(3) நைல் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில்
(4) டிரபல்கார் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில்
(5) கிரிமியன் போர் - இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் (.......)

**13.** (1) ஸ்பொர்சா - மிலான்
(2) வலோய் - வெனிஸ்
(3) மெடிசி - புளோரன்ஸ்
(4) எஸ்தெ - பெராரா
(5) கொன்சாகா - மன்டுவா (.......)

**14.** (1) பதினான்காம் லூயி - "நானே அரசு
(2) நெப்போலியன் பொனபாாட் - "புரட்சி என்பது நான்"
(3) கெமிலோ கவூர் - "இத்தாலி தனியாக எழுச்சி பெற முடியும்"
(4) காள்மார்க்ஸ் - "உலகத் தொழிலாளர்களே ஒன்றிணையுங்கள்"
(5) வின்ஸ்டன் சேர்ச்சில் - "பால்டிக் கடல் தொடங்கி எரித்திரையான் கடல் வரையான இரும்புத்திரை (.......)

**15.** (1) தாய்வான் - தாய்லாந்து
(2) மெசபத்தேமியா - ஈராக்
(3) பாரசீகம் - ஈரான்
(4) பர்மா - மியன்மார்
(5) கிழக்குப் பாக்கிஸ்தான் - பங்களாதேஷ் (.......)

- **16 - 20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள்/ திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. **X** நிரலில் உள்ளவற்றை **Y** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைச் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

**16.**

| **X** | | **Y** |
|---|---|---|
| (i) நன்னம்பிக்கை முனை | A | சீனா |
| (ii) புதிய உலகம் | B | பெரிய பிரித்தானியா |
| (iii) தூங்கும் இராட்சதன் | C | ஆபிரிக்காக் கண்டம் |
| (iv) இருண்ட கண்டம் | D | அமெரிக்காக் கண்டம் |
| (v) சூரியன் மறையாத பேரரசு | E | ஆபிரிக்காவின் தென்முனை |

(1) A D C B E (2) B A D C E (3) C D A E B (4) E C D B A (5) E D A C B (.......)

**17.** **X** / **Y**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | மொகலாயர் | A | வியட்னாம் |
| (ii) | மஞ்சு | B | சியம் |
| (iii) | இன்குயென் | C | பர்மா |
| (iv) | கொன்பவுங் | D | இந்தியா |
| (v) | சக்ரி | E | சீனா |

(1) D A C B E (2) D B A E C (3) D E A C B (4) E C D A B (5) E D B C A (.......)

**18.** **X** / **Y**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | புளோரன்ஸ் நைட்டிங்கேல் | A | விண்வெளிக்குச் சென்ற முதல் பெண் |
| (ii) | மாரி கியூரி | B | தாதியர் சேவையின் முன்னோடி |
| (iii) | வெலன்டினா தெரெஸ்கோவா | C | இஸ்ரேலின் முதல் பெண் பிரதமர் |
| (iv) | கோல்டா மேயர் | D | பிரித்தானியாவின் முதல் பெண் பிரதமர் |
| (v) | மாக்ரட் தச்சர் | E | ரேடியத்தைக் கண்டுபிடித்த போலந்து விஞ்ஞானி |

(1) A B D E C (2) A C E D B (3) B E D A C (4) B E A C D (5) D A E C B (.......)

**19.** **X** / **Y**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | அமெரிக்கப் புரட்சி | A | “செல்வந்த நாடு”, “வலிமைவாய்ந்த படை” |
| (ii) | பிரெஞ்சுப் புரட்சி | B | “அமைதி, நிலம், உணவு” |
| (iii) | மெய்ஜி சீர்திருத்தம் | C | பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிப்பில்லை. |
| (iv) | ரஷ்யப்புரட்சி | D | “விவசாயிக்கு நிலம்”, முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் |
| (v) | சீனப் புரட்சி | E | சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் |

(1) B C A E D (2) C E A B D (3) C E B A D (4) D A E B C (5) E C A D B (.......)

**20.** **X** / **Y**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | டிரக்வி லீ | A | பர்மா |
| (ii) | டேக் ஹெமர்ஷல் | B | பேரு |
| (iii) | யூத்தான்ட் | C | ஒஸ்ரியா |
| (iv) | வோல்ட் ஹய்ம் | D | சுவீடன் |
| (v) | பெரேஸ் த குவேலார் | E | நோர்வே |

(1) A C B E D (2) B D A E C (3) C A D B E (4) E B A C D (5) E D A C B (.......)

- **21 - 25** வரையிலான அனைத்து வினாக்களுக்கும் ஒரே தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவைகளில் **ஒன்று தலைப்புக்குப் பொருந்தாது.** அதனைத் தெரிவு செய்து **அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

**21. மறுமலர்ச்சி**

(1) இத்தாலியில் ஆரம்பமாகியது.
(2) கடலோடி ஹென்றி மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய முக்கிய நபராவார்.
(3) மறுமலர்ச்சி மேற்கு ஐரோப்பாவில் பல நாடுகளில் பரவியது.
(4) மக்கியவலி “இளவரசன்” எனும் நூலை எழுதினார்.
(5) பாப்பரசர் இரண்டாம் ஜுலியஸ், மைக்கல் ஆஞ்சலோவின் சேவையைப் பெற்றுக் கொண்டார். (.......)

**22. கீழைத்தேய ஒல்லாந்தப் பேரரசு**

(1) பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒல்லாந்தர் கிழக்கு நாடுகளுக்கு வந்தனர்.

(2) கி.பி.1602 ஆம் ஆண்டு ஐக்கிய ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

(3) யான் பீட்டர்சோ கூன் கிழக்கு ஒல்லாந்த பேரரசின் தாபகராகக் கருதப்படுகிறார்.

(4) ஒல்லாந்த கீழைப் பேரரசின் தலைமையகம் பத்தேவியாவில் அமைக்கப்பட்டிருந்தது.

(5) கி.பி.1591 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றினர். (.......)

**23. பிரான்சியப் புரட்சியின் பிரதான கட்டங்கள்.**

(1) பொஸ்டன் தேனீர் விருந்து

(2) தேசிய சபை அமைக்கப்பட்டது.

(3) பஸ்டீல் சிறைச்சாலை தகர்க்கப்பட்டது.

(4) பயங்கர ஆட்சி

(5) தேசிய சட்டமன்றத்தின் நிருவாகம் (.......)

**24. ஆபிரிக்கா தொடர்பான போராட்டம்**

(1) ஆபிரிக்கக் கண்டத்தில் ஆட்சியை நிறுவுதல் தொடர்பாக ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பகைமையும் அதிகாரப் போட்டியும் ஆபிரிக்கா தொடர்பான போராட்டம் எனப்படுகிறது.

(2) மிஷனரிகளும் நாடுகாண் பயணிகளும் ஆபிரிக்காக் கண்டத்தை ஐரோப்பியர்களுக்குத் திறந்தனர்.

(3) பெல்ஜியத்தின் லியோபோல்ட் மன்னனால் கொங்கோவில் சுதந்திர அரசு நிறுவப்பட்டது.

(4) எகிப்து ஜேர்மனியால் கைப்பற்றப்பட்டது.

(5) அல்ஜீரியா பிரான்சியரின் கீழ் இருந்தது. (.......)

**25. ஐக்கிய நாடுகளின் பிரதான அமைப்பு**

(1) பொதுநலவாயம்

(2) பொதுச்சபை

(3) பாதுகாப்புச் சபை

(4) தலைமைச் செயலகம்

(5) பன்னாட்டு நீதிமன்றம் (.......)

- **26 - 30** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் **(A), (B), (C), (D)** எனும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ....................................... **1** எனவும்,
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ....................................... **2** எனவும்,
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ....................................... **3** எனவும்,
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ....................................... **4** எனவும்,
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் ................**5** எனவும்
**புள்ளிக்கோட்டில்** எழுதுக.

| **அறிவுறுத்தல்கள்** | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

**26. பின்வருவனவற்றுள் தேசிய அரசின் இயல்புகள் யாவை?**

(A) அதிகாரம் மிக்க மானிய பிரபுக்கள் வகுப்பு

(B) பிரபுக்களிடமிருந்த தனிப்பட்ட படை

(C) பலம் வாய்ந்த மத்திய அரசு

(D) நிலையான தேச எல்லை (.......)

**27. கைத்தொழில் புரட்சி தொடர்பாகப் பின்வரும் கூற்று / கூற்றுக்களில் சரியானது? / சரியானவை எவை?**

(A) கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பித்தது.

(B) கைத்தொழில் புரட்சியால் தொழிற்சாலை முறை ஆரம்பிக்கப்பட்டது.

(C) பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பெரும்பாலான நாடுகளில் கைத்தொழில் விரைவாக முன்னேற்றம் அடைந்தது.

(D) கைத்தொழில் புரட்சி புதிய பேரரசுவாதம் தோன்றுவதற்கு வழிவகுத்தது. (.......)

**28. ஜேர்மனியின் ஐக்கியம் தொடர்பாகப் பின்வரும் கூற்று / கூற்றுக்களில் சரியானது? / சரியானவை?**

(A) பிரஷ்யாவின் தலைமையில் ஜேர்மனி ஐக்கியமடைந்தது.

(B) சொல்வரையின் சுங்க வரி சங்கம் ஜேர்மன் அரசுகள் இடையே வர்த்தகத் தடையை நீக்கியது.

(C) லூயி நெப்போலியனின் ஆதரவுடன் ஜேர்மனி ஒன்றிணைக்கப்பட்டது.

(D) கரிபால்டி ஐக்கிய ஜேர்மனியின் முதலாவது சான்சலாராக நியமிக்கப்பட்டார். (.......)

**29. பனிப்போர் தொடர்பாகப் பின்வரும் கூற்று / கூற்றுக்களில் சரியானது? / சரியானவை?**

(A) இரண்டாம் உலகப்போரின் பின்னர் முதலாளித்துவ, சமவுடமை எனும் இரு அணிகளுக்கிடையிலான அரசியல், இராசதந்திர மோதல்கள் பனிப்போர் எனப்படும்.

(B) ஜோசப் ஸ்ராலினின் கொள்கைகள் பனிப்போர் தளர்வடையக் காரணமாகியது.

(C) சோவியட் தேசத்தின் வீழ்ச்சியின் பின்னர் பனிப்போர் முடிவுற்றது.

(D) பனிப்போர் காலத்தில் மேற்கு, கிழக்கு ஜேர்மனி இணைக்கப்பட்டது. (.......)

**30. பின்வரும் தலைவர்களுள் இந்தோனேசியாவின் ஜனாதிபதி ஜனாதிபதிகள் யார்? / யாவர்?**

(A) அவுங்சான்

(B) சுகர்ணோ

(C) சுகர்டோ

(D) ரமோன் மெக்சேசே (.......)

- **31 - 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புக் குறிக்குள் அதன் இலக்கத்தை எழுதுக.**

**31. "இறுதி இரவு உணவு" சித்திரத்தை வரைந்த பிரபல ஓவியர் யார்?**

(1) ஜிவோட்டோ (2) பொட்டிஷெலி (3) லியனாடோ டாவின்சி
(4) மைக்கல் ஆஞ்சலோ (5) டிடியன் (.......)

**32. இங்கிலாந்தின் முதலாவது பிரதம மந்திரி யார்?**

(1) ஒலிவர் குரொம்வெல் (2) ரொபர்ட் வோல்போல் (3) சாள்ஸ் டவுன்ஷென்ட்
(4) பிரடரிக் நோர்த் (5) வில்லியம் பிட் (.......)

**33. பரிணாமவாதக் கோட்பாட்டை முன்வைத்த விஞ்ஞானி யார்?**

(1) சாள்ஸ் டார்வின் (2) லுயி பாஸ்டர் (3) ஹர்பர்ட் ஸ்பென்சர்
(4) சிக்மன்ட் பிரொயிட் (5) அல்பட் அயின்ஸ்டயின் (.......)

**34. "முடிவில்லா புரட்சி" எனும் எண்ணக்கருவை முன்வைத்த போல்ஷெவிக் தலைவர் யார்?**

(1) பிலெக்கனொப் (2) வீ. ஐ. லெனின் (3) புக்கரின்
(4) ஜோசப் ஸ்டாலின் (5) லியோன் ட்ரொட்ஸ்கி (.......)

**35. சீன மக்கள் குடியரசின் முதலாவது பிரதம மந்திரி யார்?**

(1) சுன் யற் சென் (2) சியாங் காய் ஷெக் (3) மா-ஓ-சே-துங்
(4) சௌ என் லாய் (5) லின் பியாவோ (.......)

- **36 - 40** வரையுள்ள வினாக்களின் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எது என்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதும் முதலாவது கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | கி.பி.1649 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் சாள்ஸ் மன்னன் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டான். | தோமஸ் ஹொம்ஸ் என்பவரால் “வெவியதான்” எனும் நூல் எழுதப்பட்டது. | (.......) |
| **37.** | பிரான்சிய மன்னனின் ஆதிபத்தியம் தொடர்பாக இருந்த தடைகளை நீக்குவதும் பிரான்சை ஐரோப்பாவின் பலம் வாய்ந்த அரசாக மாற்றுவதும் ரிச்சலியுவின் பிரதான நோக்கமாகும். | புரட்சியின் பின்னர் லூயி நெப்போலியன் பிரான்சில் ஆட்சிக்கு வந்தான் | (.......) |
| **38.** | 1868 சீர்திருத்ததத்தினால் யப்பானில் டொக்குகாவா அரச வம்சம் தாபிக்கப்பட்டது. | பெட்டிஸ்டா எனும் ஏகாதிபத்திய ஆட்சியாளனை அகற்றி 1959 ஆம் ஆண்டு பிடோல் கஸ்ரோ கியுபா-வின் ஆட்சியைக் கைப்பற்றினான். | (.......) |
| **39.** | இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாவற்கு அண்மிய காலப்பகுதியில் சர்வதேச சங்கம் செயலிழந்து காணப்பட்டது. | மஞ்சூரியப் பிரச்சினை, அபீசினியப் பிரச்சினை என்பனவற்றிற்குத் தீர்வு காணத்தவறிய சர்வதேச சங்கம் ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்த போது அதனைத் தடுப்பதற்கும் முற்படவில்லை. | (.......) |
| **40.** | மோதிலால் நேரு இந்தியாவின் முதலாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். | சுல்பிகார் அலி பூட்டோ வங்காளதேசத்தின் முதலாவது பிரதம மந்திரியாவார். | (.......) |

* *

# (25 C) நவீன உலக வரலாறு

**(கி.பி. 1500 முதல் 1989 வரை)**

**வினாத்தாள் II**

**பகுதி II**

**அறிவுறுத்தல்கள்**

* **முதலாம்** வினா கட்டாயமானது.
* அது தவிர பகுதி B மற்றும் C என்பனவற்றிலிருந்து **ஒரு** வினாவையேனும் தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக. முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை **நான்கு** ஆகும்.

  ( **முதலாம்** வினாவுக்கு விடை அளிப்பதற்கு **உலகப் புறவுருவப் படம்** வழங்கப்படும்)

---

**பகுதி A**

**1.** உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் படத்தில் பின்வரும் அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(i)** | செங்கடல் | **(ii)** | நைல்நதி | **(iii)** | பிரனீஸ் |
| **(iv)** | பேர்லின் | **(v)** | மொஸ்கோ | **(vi)** | போர்த்துக்கல் |
| **(vii)** | பனாமாக் கால்வாய் | **(viii)** | மலாக்காத் தொடுகடல் | **(ix)** | பிலிப்பீன் தீவுகள் |
| **(x)** | நியூயோர்க் | **(xi)** | கேப் ரவுன் | **(xii)** | கல்கத்தா |

(1 x 12 = 12 புள்ளிகள்)

**பகுதி B**

**2.** "கி.பி.1453 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்திநோபிளின் வீழ்ச்சி நவீன உலக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்." ஆராய்க. (16 புள்ளிகள்)

**3.** "அமெரிக்க சுதந்திரப்போர் பிரித்தானியப் பேரரசுக்கு எதிராக இடம்பெற்ற முதலாவது வெற்றிகரமான சுதந்திரப் போராட்டமாகும்"

**(i)** அமெரிக்க சுதந்திரப் போரின் தலைவரின் பெயரினைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

**(ii)** வட அமெரிக்காவில் காணப்பட்ட **நான்கு** ஆங்கிலக் குடியேற்றங்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

**(iii)** அமெரிக்க சுதந்திரப் போருக்கு வழிவகுத்த பொருளாதாரக் காரணிகளை சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iv)** அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவு, அதன் தாக்கம் என்பவற்றின் அடிப்படையில் அதன் முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்க. (09 புள்ளிகள்)

**4.** முதலாம் உலகப் போர் ஏற்படுவதற்கான காரணங்களைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.

**(i)** புதிய பேரரசுவாதம்

**(ii)** ஐரோப்பா இரு அணிகளாகப் பிளவுற்றமை (16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகச் சிறு குறிப்பு எழுதுக.

**(i)** இங்கிலாந்தின் பாராளுமன்ற முறையின் வளர்ச்சி

**(ii)** பிரான்சியப் புரட்சியின் விளைவுகள்

**(iii)** இத்தாலிய ஐக்கியத்தின் பிரதான கட்டங்கள்

**(iv)** வி.ஐ லெனின்

(8 x 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** "ஐரோப்பாவில் பாசிசவாதத்தினதும் நாசிசவாதத்தினதும் எழுச்சி இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்கான பிரதான காரணமாகும்"

**(i)** ஐரோப்பாவில் பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சி பெற்ற **இரு** நாடுகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

**(ii)** அந்நாடுகளிலிருந்த பாசிசவாத, நாசிசவாதத் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

(02 புள்ளிகள்)

**(iii)** அந்நாடுகளில் பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சி பெறுவதில் தாக்கம் செலுத்திய பொதுவான காரணிகளை முன்வைக்குக. (04 புள்ளிகள்)

**(iv)** பாசிசவாதத்தினதும் நாசிசவாதத்தினதும் எழுச்சி இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு எந்த அளவில் காரணமாக அமைந்தது என்பதை சுருக்கமாக எழுதுக. (08 புள்ளிகள்)

**7.** பின்வரும் தலைப்புக்களின் கீழ் சீன பொதுவுடமைப் புரட்சி தொடர்பாக விமர்சிக்க.

**(i)** மா-ஓ-சேதுங்கின் தலைமைத்துவம்

**(ii)** மக்கள் சீனக் குடியரசு அமைக்கப்பட்டமை (16 புள்ளிகள்)

**8. (i)** ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நோக்கங்களை விபரிக்குக. (06 புள்ளிகள்)

**(ii)** கி.பி.1980 ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் சபை அதன் குறிக்கோளை நிறைவேற்றுவதில் எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளது என்பதனைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைவர்களில் எவரேனும் **இருவரின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக

**(i)** மகாத்மா காந்தி

**(ii)** ஜோசப் ஸ்டாலின்

**(iii)** ஹோ-சி-மிங்

**(iv)** சுகர்ணோ

(8 x 2 = 16 புள்ளிகள்)

* * *

# (25 C) நவீன உலக வரலாறு

**(கி.பி. 1500 முதல் 1989 வரை)**

**பகுதி II**

**1.**

